51

உ

ஓம்.

சுவாமிமலை திருமுருகன்

கும்மிப் பாட்டு.

-JAN 19
MADRAS

வில்லைவனம்புதூர்,
வே. ஷண்முகம் பிள்ளையால்,
தென்னிமலை நடுக் காரைவீடு, திருவாளர்
ரெ. கந்தசுவாமித் தேவரவர்கள்
பொருளுதவியின் பேரில்
விருதுநகர், ஸ்ரீமாந்
இரமலிங்கக் குருக்களவர்களது,
சச்சிதனந்தம் பிரஸிற்
பதிப்பிக்கப்பெற்றது,
1926. [பைசா 6

உ

ஓம்:

திருச்சிற்றம்பலம்.

2461
894.811

சுவாமிமலை திருமுருகன்

கும்மிப் பாட்டு.

OFFICE OF THE REGISTRAR ...
1-JAN 1927

காப்பு.

தந்தி முகந்தனைத் தொந்தி வயிற்றனை
வந்து தொழுபவர் சிந்தை தெளிவரே
சுந்தர கலியாணி சுதனெனுங்
கந்தனுமங் கருதித் துதித்திட
சிந்தை தன்னிற் தெளிவு மிகத்தரும்
தந்தி யின்னடி தாளிணைப் போற்றுவாம்.

பொத்தை யங்கிரி உச்சியின் மேவிய புண்ணியனை
அத்தன் மதலை யருள் முருகேசனை ஐங்கரனை
சித்திடை வள்ளியுந் தெய்வானை யுங்கண்டு தெரிசிப்பவர்
முத்தியும் சித்தியும் புத்தியும் வித்தையு மேவுவரே, 3

சத்தியுமை யருள்பாலன் சரவணச் சண்முகனை
பத்தியொடு தொழுதேற்றி யிறைஞ்சிப் பணிந்துமலை
சுத்திதென் பாரிசம் தோன்றழகானந்த சுவாமியெனும்
சித்தனைப் போற்றி தெரிசிப்போர்வினை தீர்ந்திடுமே. 4

குன்றிற பெரிய குருநாத சுவாமி கிரிதலைமேல்
சென்று அவதரித் தாண்டருளும்சிவ சுப்ரமண்யம்
குன்றுக் குறவள்ளி தெய்வானைபாதம் குவித்திருகை
நின்றடி வீழ்ந்து தொழுவோர்பழவினை நீங்கிடுமே. 5

தண்டாமரையும் தடாகமும் பொய்கையும் தாவுகளுந்
பண்டிமிகுத்த பனந்தோப்புங் காவும் பலவளமும்
அண்டர்முனிவர் அழகானந்தச் சித்தரா சனமும்
கண்டுதெரிசித் தடிபணிவோர் வினை கலங்கிடுமே. 6

மானும் மழுவுங் கரமேந்தும் ஈசன் மலரடியும்
தேனிலுந் தித்திக்கும் பாலூற்றுந் தீர்த்தச் சிறப்புகளும்
ஆனைத் தடமும் அழகானந்தச் சித்த ரம்பலமும்
தானே கண்டு இருகை மேல்குவித்துத் தெரிசிப்பவரே. 7

பக்தன் சண்முகன் துதித்திடப் பாடினேன் பதிகம்
குத்தம் எத்தனை யிருக்கினுங் கொண்டருள் புரிந்து
புத்தியும் வித்தையும் பொருள்களும் ஞானமும் புகல
நித்தம் வேண்டி னேனின் னிருபதமன நிறைந்தே. 8

கும்மி.

கும்மியடி பெண்காள் கும்மியடி ஒற்றைக்
கொம்பனை வாழ்த்தியே கும்மி யடி
நம்மை யாளுஞ்சிவ சுப்ரமண்யம் பாதம்
நாடிக் கும்மி யடி யுங்கடி. 1

சங்கு முழங்குஞ் சுவாமி மலைவளர்
சண்முகன்மேல் கும்மிப்பாட்டுரைக்க
ஐங்கரனும் சிவ சங்கரனும் உமை
அம்பிகை மாலுந் துணையாமே. 2

தெக்ஷண பூமி திருநெல்வேலி ஜில்லா
அச்சுதன் தோதாத்திரிகீழ் தென்பால்
உச்சிதமான மலையின் மகத்து வம்
இச்சையுடன் சொல்லக் கேளுமெல்லாம். 3

அந்த சுவாமி மலைமுடி மீதினில்
கந்த சுவாமியும் வீற்றிருந்தார்
சந்தோஷமாக அழகாவந்த சித்தர்
சார்வு மலைக்குகை மீதிருந்தார். 4

இன்னும் பலசித்தர் தேவர் முனிவர்
இருக்குங் குகையும் மலைக்காவும்
பின்னு லறிவிப் போமென்று மொழிந்தனர்
சொன்னபடி பெண்கள் கும்மியடி. 5

சுந்தரமான மலைமுடி மீதினில்
கந்த சுவாமியும் வீற்றிருந்தார்
கந்த சுவாமியும் அந்த மலைதனில்
வந்த மகுத்துவம் கேளுமினி. 6

அந்தமுள்ள ஆயிரத் தெண்பத்தோரு
மாண்டினில் செட்டில் நடத்துவதால்
சந்தோஷமாகவே ஒட்டர்சிலர் மலை
சார்வுதனில் கேஸ் கல்லடித்தார். 7

கல்லையடித்து வருகிற நாள்தனில்
நல்லவனு மொரு ஒட்டனுக்கு
கல்லு மலைவளர் புல்லுச் செடியுள்ளே
நல்ல சுனையொன்று தோன்றிடுமாம். 8

நல்ல சுனையது கண்ணுக்குத் தோணவே
வல்லவன் ஒட்டனும் ஏதுசெய்தான்
எல்லோரும் வாருங்க ளென்று சொல்லஒட்டர்
ஏகமாய்க்கூடியே வேலைசெய்தார். 9

98620

சம்மட்டி கூந்தால் தான் வேண்டாம்கையில்
தடியும்ஆப்புமே தான்வேண்டாம்
மண்வெட்டி கொண்டுமே குட்டையில்வாரியே
மலையருகாகப் போட்டு விட்டார். 10

வெட்டவெட்ட அழல் தோன்றுதேயல்லாது
வேறு மலைப்பாறு கிட்டவில்லை
எட்டுநாள்வேலை யாகுமுன்னே சுனை
மட்டில்லாமல் வந்து பொங்கிடுமாம். 11

கண்டுமகிழ்ந் ததிசயித்துச் சிவ
கந்தனருளாற் கிடைத்த தென்று
உண்டுசுகித் திருக்கையிலே மலை
கண்ட்ராக்டுப் பிள்ளை வந்தனராம் 12

வந்தவர்கண்டு மனமகிழ்ந்து திரு
மாலோன் மருகன் செயலெனவே
அந்தச்சுனைக்குக் குடதிசை யாக
அரசமரமது வைத்தனரே. 13

அரசமரமது தான்வளர வதில்
ஐங்கரனை வைத்துப் பூசைசெய்து
வரிசையாகவே வாழ்வா போரவர்
வந்துவணங்கிடச் செய்தார்காண். 14

இப்படியாக வருகிற நாளினில்
சுப்ரமண்யன துதி கொண்டருள
விற்பனமாகவே வேலாயுத மொன்று
அற்புதமாகச் சமைத்தனரே. 15

சோசியம்சிவ சுப்ரமண்ய பிள்ளை
சேயன்பிறவிப் பெருமாளிடம்
ஆசையுடனே சுபதினங் கேட்கவே
நேசமுடனே எடுத்துரைத்தார் 16

நல்லசுப தின வேளையிலே சங்கு
நாதமுழங்கத் தவில்முழங்க
நல்லமலையில் சுடலை முத்துப்பிள்ளை
வெள்ளி வேலாயுதம் ஊன்றினரே. 17

வேலா யுதத்தையும் ஊன்றிடவேபந்த
வேளையில்பூமாரி பெய்திடவே
ஞாலமதிலெந்த நாளுந் துதித்திட
நாளுக்கு நாளாய் வளர்ந்திடுமாம். 18

வேலாயுதத்திற்குச் சங்கமைக் கொண்டு
வெகுவாகப் பூசைகள் செய்துவைத்தார்

Q 26:417
N26

மாலோன்மருகன் அருளாலே ஊரார்
மாதாந்த சேவை புரிந்தாரே. 19

நாராயணன் வாழும் நாங்குனேரிதனில்
வீரவாகு பிள்ளை தானிருந்தார்
ஏராளமான தெரிசனைக்கு அன்பன்
வீரவாகு பிள்ளை வந்தனராம். 20

அந்தமலைவளர் கந்தன் மகத்துவம்
அன்பன்வீரவாகு தானறிந்து
வந்துதரிசனம் செய்து மலைதனில்
மண்டபம் செய்யத் துணிந்தனராம். 21

தும்பிக்கை யோனுக்கோர் மணடபமாம்அவர்
தம்பிதனக்கோர் மண்ட பமாம்
அம்பிகைபாலன் இருவருக்கும் அன்பன்
அழகு மண்டபம் செய்தனராம். 22

வெள்ளிக்கிழமை சுபதின வேளையில்
பிள்ளையாரைப்பிர திஷ்டை செய்து
வள்ளியுங் கந்தனும் மாதுதெய் வானையும்
வைத்துப் பிரதிஷ்டை செய்தனராம்.

மண்டல பூசைகுரு பூசைமறை
யோர்கள் விதிப்படி செய்தார்கள்
எண்டிசையோர்கள் துதித்திடவே இரு
காலும் பூசைகளாகிடுமாம். 24

அந்தணர்பூசை நைவேத்தியதூபமும்
அர்ச்சனையும்பல தீபங்களும்
விந்தையாக நடந்து வருவதை
வந்துதரிசியும் நேசர்களே. 25

மாதவி சேடமும் வருடாபி சேகமும்
பற்றும் விசேடங்க ளத்தனையும்
ஆசாரியர்கள் நடத்தி வருகிற
அற்புத மென்சொல்வேன் நேசர்களே. 26

விற்பனமாகவே நடந்து வருகிற
வேளையில் ரெவினியூ இன்ஸ்பெக்டர்
சுப்பிரமணிய நாதன் தெரிசனம்
அற்புதமாகப் புரிந்தனரே. 27

உன்னதமான சுவாமி மலைவளர்
கன்னிக்குறவள்ளி நாயகனை
பன்னிருகைப் பெருமானை மனதினில்
எந்நேரம் போற்றித் தொழுதிடுவார். 28

ஊர்வல கோலமும் சூரசம் மாரமும்
ஓங்கிநடந்திடும் நாளையிலே
பேர்படைத்த வலியநேரிப் பண்ணை
பிள்ளை பரங்கிரி நாதனுமே. 29

வேதியர் போற்றவே வாழ்ந்திடுவோன்
ஆதியிற்சுனை தானுணர்ந்தோன்
நீதி மிகுத்திடும் கோதிலாப் புண்ணியன்
தாதியர்வணங்கிட வந்தனனே. 30

பத்தன் பரங்கிரி நாதன் வந்து
சத்தியின் மைந்தனைப் போற்றிடவே
சித்தியும் முத்தியும் பெற்ற அழகானந்தர்
சித்தர் தெரிசனம் தோன்றிடுமாம் 31

மேடுகளும் பலகாடுகளும் வெட்டி நல்ல
பாதைகள் தானுமே யுண்டுபண்ணி
நாடோர் புகழும் பரங்கிரி நாதனும்
நல்லமலைக் குகை காவுகண்டார். 32

அந்தமலைக் குகை காவுதனில்
அழகானந்தசித்த ரமைந்தபடி
வந்தவர் கண்டு வணங்கித் துதித்திட
வைத்துப் பிரதிஷ்டை செய்தனரே 33

வைத்துப் பிரதிஷ்டை தானுமே செய்ய
வந்த மானிடர் கண்டுவக்க
சுத்துப் பிரகாரம், நத்தி மலைதனில்
சொந்தமாய்த் தான்செய்து வந்தனரே. 34

பிரபல வான்புகழ் பட்டர்புரம் பண்ணை
பிள்ளைத்திரு வேங்கிட நாதனுமே
அருமறை யானுக் கன்றுரைத்தஉயர்
ஆறுமுகனடிக் கன்புடையோன். 35

வாசம் புகழவே தேவாலயங்களில்
மன்னவன் கட்டளை மெத்தவுண்டு
ஆசையுட னவர் சுவாமி மலைவளர்
ஆண்டவன் சந்நிதி வந்து நின்று. 36

வந்து தெரிசனம் செய்து முருகனை
வாழ்த்தி மலரடி போற்றி செய்து
சந்தோஷ மாகவே நித்தியக் கட்டளை
தான்நடத்த விடைகொடுத்தார். 37

நித்தியக் கட்டளை தானளித்து மணிக்
கொட்டகை முன்னாலே செய்து வைத்து

சக்தியின் பாலனை முத்தைய சீலனை
நித்தம் துதிக்கிறார் நேசர்களே. 38

கூந்த குளமதில் வளர்ந்திடும் பண்ணையார்
கெண்டபுரத்துத் துரைமார்கள்
சாந்திமதி மைந்தன் கந்தசுவாமியைக்
கண்டுதெரிசனஞ் செய்தார்கள். 39

தண்டமிழ் வேலனை சுவாமி மலைவளர்
சங்கரி பாலன் அறுமுகனை
கண்டு தெரிசனம் செய்து முருகனை
கொண்டு நடத்துறார் நேசர்களே. 40

மன்றுதனி லெந்த நாளுந் துதித்திட
மாதாந்த மற்றும் விசேடங்களும்
என்று மிருகால பூசை நைவேத்தியம்
கொண்டு நடத்துறார் நேசர்களே. 41

கற்றோர் மகிழ்ந்திட சொற்றேன் பொழிந்திடும்
நற்றமிழ் தேர்ந்திடுங் கண்ணியவான்
அற்றோர்க்கு உண்டியும் விரையில் ஊட்டிடும்
கண்ணபிரானுமே வந்தனரே.

அந்தமில் புகழ்சேர் கந்தன் புராணத்தை
சொந்தமாய்க் கொண்டு பொருளுரைக்கும்
எந்தத் திசையினு மேத்திடு மேந்தலும்
சிந்தை மகிழ்ந்து வணங்கினரே. 43

நல்லதோர் செல்வமும் தான்படைத்து
பிள்ளைகள் கூட்டத்திற் கோர்பெருமை
ஒல்லையிற் செய்திடும் வல்லாளன் வாக்கினால்
செல்வந் திரட்டியே தருவமென்றார். 44

தெப்பக்குளத்திற் கோர்படித் துறையும்
ஒப்பமுடித்துப் படியுமிட்டு.
செப்பமாய் சுவாமி மலைதனி லேறிட
இப்பவே செய்திட வேண்டுமென்றார். 45

கந்த சுவாமியும் வந்த மகத்துவம்
சிந்தை தெளியவே செப்பிவைத்தேன்
அந்தத் தலத்தின் மகிமையைக் கும்மியில்
அறையக் கேளுங்கள் நேசர்களே. 46

சுவாமிமலைவட பாரிசத்தில்வந்து
தோன்றுங் கந்தபுஷ்கரிணியது
நேமமுடனதில் ஸ்நானம் செய்வோர்க்கு
நீங்காப் பிணியெல்லாம் நீங்குமென்றார். 47

வாழுமலைகீழ் சார்வு தனிலொரு
நாளிக் கிணறு தோன்றிடுமாம்.
தாழ்வில்லாத சுனை கன்னில் முழுகுவோர்
ஊழ்வினை கன்மம ஒழியுமென்றார். 48

ஊரணியாம் வண் டேரணியாம் ஒரு
காலமும் வற்றாத ஊரணியாம்
ஊரணி தனனில் முழுகித் துதிப்போர்க்கு
தீராப்பிணியெல்லாம் தீருமென்றார். 49

மேல்புறந் தன்னிலொரு நதியாம் அதை
பால்நதி யென்பதற் கொப்பிடலாம்
சீலமுடன் அள்ளிச் சாப்பிடு வோர்க்கு
செய்வினை தீவினை மாறுமென்றார் 50

சுவாமி மலைதனில் வாழுஞ் சுப்பிரமணியன்
நாமமென்னாளுந் துதிப்பவர்க்கு
தாமே முன்னாள் செய்த கன்மவினைகளும்
சண்டாள நோய்களும் தீருமென்றார். 51

பச்சைக் கொடிமர மொன்றுளதா மலை
உச்சிக்கு மேலாக வோங்கி நிற்கும்
இச்சையுடனே வளரு மரமதின்
உச்சியின் மேல்கிளை சூழ்ந்திருக்கும். 5

வண்டேரணியுங் கொடிமரமும் சுவாமி
வாழுஞ் சந்நிதி முன்பாக
நின்று தலத்தில் வளரு மகிமையைக்
கண்டு மகிழுங்கள் நேசர்களே 53

சுத்து மலைப்பிர காரமதில் தென்பால்
சூழுங் குகைதனில் வீற்றிருக்கும்
அத்தனருள் பெற்ற அநகானந்த சித்தர்
சித்தியும் முத்தியு மென்ன சொல்வேன். 54

சொல்லுவ தேதடி மங்கையரே என்றால்
சொல்ல முடியுமோ தோகையரே
வள்ளிமணாளன் கொடுத்திடுங் காட்சிக்கு
தெள்ளு தமிழிடங் கொள்ளாது. 55

ஆனைத் தடமும் சிவனடி பாதமும்
அடவியுங் குன்றில் தடாகங்களும்
தேன்மொழி வள்ளி தெய்வானை சுப்பிரமண்யனுஞ்
சீர்பாதம் போற்றி யடியுங்கடி. 56

மாதம் ஒருதரம் சுக்கிர வாரத்தில்
மாதாந்த சேவை புரிவோர்கள்

வேதனையும் பலவாதனையும் நீங்கி
ஆதரவாகவே வாழ்ந்திருப்பார்.

வந்திடுங் கார்த்திகை தீபத்திலும் தை
மாதத்திலே வருபூசத்திலும்
கந்தன் கொடுக்கின்ற காட்சி மகிமையை
கண்டு மகிழுங்கள் நேசர்களே. 58

விந்தையதாக வளரும் சிவதலம்
வந்து தரிசித் தடிபணிவோர்
கந்தனருளாலே பந்தவினை நீங்கி
சந்தோஷ மாகுவர் நேசர்களே. 59

சத்துரு சங்கார வேலனைப் போற்றியே
சாட்டாங்கமாகத் துதிப்போர்கள்
சித்தி முக்தி இலைபூதி பிரசாதம்
பெற்றுலகினில் வாழ்ந்திருப்பார்- 60

மாசில்லா ஆபிரத்தி தொண்ணூற்றேளா மாண்டில்
மாசமும் ஆடி யிருமூன்றில்
தேசம் புகழ்சிவ சுப்ரமண்யன் மீது
நேசமாய்க் கும்மி தெடுத்துரைத்தேன் 1

வில்லவனம் புதூர் வேலுமயில் பிள்ளை
செல்வனெழுது கவியதனை
தொல்லுலகி லெந்த நாளுந் துதிப்போர்க்கு
அல்லல் வினைக ளகன்றிடுமே. 2

தொண்டன் பரங்கிரி நாதனுரைப்படி
தண்டமிழ் சண்முகம் பாடிவைத்தேன்
மண்டலத்திற் கற்றறிந்த பெரியோர்கள்
மைந்தன் பிழையைப் பொருப்பீரே. 3

அரசனும் வாழ்க குடிவாழ்க
கந்தநாதனும் வாழ்க புவிவாழ்க
தேவர்கள் மூவர்கள் வாழ்கவென்று பெண்கள்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 4

சுவாமிமலை திருமுருகன் கும்மிப்பாட்டு முற்றுப்பெற்றது.

...சென்னை-600 008.
148620